# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC - 33 of 2024

## வழக்கு சாட்சி:PW - 4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்பிரமணியன் | தேதி : | 18.11.2025 |
| தந்தை பெயர்: | காளிமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 18.11.2025

**முதல் விசாரணை**

நான் தென்னவநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சயம் கொத்தனார் கையாளாக வேலை செய்து வருகிறேன். கடந்த 16.02.2018 ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் நானும் எங்கள் ஊரை சார்ந்த முருகன் என்பவரும் தென்னவநேரி விலக்கு அருகே உள்ள பாலசுப்பிரமணியன் என்பவரது டீக்கடைக்கு அருகே நின்று கொண்டிருக்கும் போது மூலைக்கரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளரும் ஒரு போலிசாரும் வந்தார்கள். அந்த இடத்தை ஆங்காங்கே சுற்றி சுற்றி பார்த்து எங்கள் இருவர் முன்னிலையில் பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது

கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் பார்வை மகஜரில் முருகன் என்பவர் 1வதாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அ.சா.ஆ-2 ஆகும். அதன்பின்பு மேற்படி அதே போலிசார் எங்கள் இருவர் முன்னிலையில் TATA Ace ன் உடைந்த கண்ணாடி துண்டுகளை அதே இடத்தில் வைத்து அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 1வதாக அத்தாட்சியில் முருகன் என்பவர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளார். அந்த அத்தாட்சி அ.சா-ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்டும் கண்ணாடி துண்டுகள் சா.பொ.2 ஆகும். அது இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

நான் சம்பவ காலத்தில் கொத்தனார் வேலை பார்த்தேனா என்றால் டீக்கடை வைத்திருந்தேன். நான் டீக்கடைக்கு போகும் போது எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் ஒரு SI மற்றும் ஒரு போலிஸ் வந்தார்கள். எதில் வந்தார்கள் என்றால் பைக்கில் வந்தார்கள். இரண்டு பேரும் ஒரே பைக்கில்தான் வந்தார்கள். SI க்கும் போலிஸ் காரர்களுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் என்றால் தெரியும். வண்டியை யார் ஓட்டிவந்தார் என்றால் SI ஓட்டி வந்தார். ஏற்கெனவே எழுதி வைத்திருந்த பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும் என்ன எழுதியிருந்தார்கள் என்றால் ஒரு ஊரணி, சிவனைந்த நாடார் வயல், முனீஸ்வரன் கோவில், தென்னவநேரிக்கு ஊருக்குள்ள வரும்

ரோடு போன்றவை வரையப்பட்டிருந்தது. போலிசார் சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. ஊர்காரர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும். பக்கத்தில்தான் சம்பவம் நடந்தது என்று கேள்வி பட்டேன் ஆனால் எங்கு என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை என்று விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரயணையில் கண்ணாடி எடுத்ததாக சொல்லியதை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் அங்கு எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நிமிடங்கள் நின்று கொண்டிருந்தார்கள். அதன்பின்பு சென்றுவிட்டார்கள். என்னுடன் யாரெல்லாம் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் நானும் முருகனும் நின்றுகொண்டிருந்தோம். வேறு யாரும் இல்லை. போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு கூப்பிட்டார்களா என்றால் இல்லை. அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 சுரேஷ் எனக்கு தெரியாது. அவருக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதி சொன்ன நேரத்தில் என் முன்பாக் பார்வைமகசஜர், மாதிரி வரைபடம் வரைநத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து எழுதாத பேப்பரில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.